بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 29

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

14 துல்கஃதா 1440 ஹிஜ்ரி கமரி 18 வஃபா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

18 ஜூலை 2019


## அல்லாஹ்வின் கட்டளை

وَكُنْتُمْ عَلٰى شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ فَأَنْقَذَكُمْ مِّنْهَا ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ○

நீங்கள் ஒரு நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் இருந்தீர்கள். பின்னர் அவன் உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். இவ்வாறே அல்லாஹ் உங்களுக்குத் தன் வசனங்களை நீங்கள் நேர்வழியினைப் பெறும் பொருட்டு விளக்குகின்றான். (3:104)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**பூமி மற்றும் வானத்தின் அத்தாட்சிகள் கற்பனைத் தெய்வங்களுக்கான இருப்பிற்கான ஆதாரத்தை வழங்கவில்லை. மாறாக, أَحَدُ الصَّمَدُ لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ என்ற இறை இருப்பை வெளிப்படுத்துகின்றது. இஸ்லாம் எடுத்துக் கூறுகின்ற அந்த இறைவன் உயிருள்ளவனும், நிலைத்திருக்கக் கூடியவனும் ஆவான்**

**திருக்குர்ஆனின் போதனைக்கான அத்தாட்சி இயற்கைச் சட்டத்தின் நாவிலிருந்து வெளிப்படுகிறது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### இஸ்லாத்தின் இறைவன்

அறிவின் மீது கற்களால் அடித்து வலுக்கட்டாயமாக ஏற்றுக் கொள்ளச் செய்யும் மற்றும் அவனது பண்பைக் குறித்து எந்தவொரு அடையாளத்தையும் வெளிப்படுத்தாமல் இருக்கின்ற இறைவன் இஸ்லாத்தின் இறைவன் அல்ல. மாறாக, அந்த (இஸ்லாத்தின்) இறைவன் தான் இருக்கின்றான் என்பதை தெளிவாக எடுத்துரைக்கின்றான்.

எவ்வாறு ஒவ்வொரு தெருவின் ஆரம்பத்திலும் அந்த வசிப்பிடம் அல்லது நகரத்தின் பெயரை அடையாளங்கண்டு கொள்வதற்காக பலகை வைக்கப்பட்டிருக்கின்றதோ அதே போன்று பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பொருளும் அவனது அடையாளமாக இருக்கிறது. அது இறைவன் பக்கம் வழிகாட்டுகின்றது. மேலும் தமது இருப்பைப் பற்றி மட்டும் அது எடுத்துக் கூறவில்லை. மாறாக, மன நிம்மதியை தரக்கூடிய ஆதாரத்தையும் தருகின்றது.

பூமி மற்றும் வானத்தின் அத்தாட்சிகள் கற்பனைத் தெய்வங்களுக்கான இருப்பிற்கான ஆதாரத்தை வழங்கவில்லை. மாறாக, أَحَدُ الصَّمَدُ لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ என்ற இறை இருப்பை வெளிப்படுத்துகின்றது. இஸ்லாம் எடுத்துக் கூறுகின்ற அந்த இறைவன் உயிருள்ளவனும், நிலைத்திருக்கக் கூடியவனும் ஆவான். பாதிரி ஃபண்டர் இந்தியாவிற்கு வந்து மார்க்க களத்தில் தமது காலைப் பதித்தார். மேலும் இஸ்லாத்திற்கு எதிராக குறை கூறினார். மேலும் மீஸானுல் ஹக் என்ற தமது நூலில், எந்த தீவில் முக்கடவுட் கொள்கையின் போதனை சென்றடையவில்லையோ அங்கு வசிப்பவர்களுக்கு மறுமை நாளில் முக்கடவுட் கொள்கையின் அடிப்படையில் கேள்வி கணக்கு நடக்குமா? என்று அவரே கேள்வி கேட்டு விட்டு, அவர்களுடன் ஏகத்துவத்துவ கொள்கைக்கேற்ப கேள்வி கணக்கு நடைபெறும் என்று அவரே பதிலளிக்கின்றார்.

ஏகத்துவத்தின் பிம்பம் ஒவ்வொரு பொருளிலும் இல்லையென்றால், மேலும் முக்கடவுட் கொள்கை ஒரு ஜோடிக்கப்பட்ட மற்றும் கற்பனையான எண்ணமாக இருக்கவில்லையென்றால் பிறகு ஏகத்துவ கொள்கைக்கேற்ப கேள்வி கணக்கு ஏன் நடைபெறும்? என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

### திருக்குர்ஆனின் போதனைக்கான அத்தாட்சி இயற்கைச் சட்டத்தின் நாவிலிருந்து வெளிப்படுகிறது

அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّهٗ لَقُرْاٰنٌ كَرِيْمٌ ○ فِيْ كِتٰبٍ مَّكْنُوْنٍ ○ لَّا يَمَسُّهٗٓ إِلَّا الْمُطَهَّرُوْنَ

(56:78–80)

இதன் பொருள் என்னவென்றால், இந்த திருக்குர்ஆன் நன்கு பாதுகாக்கப்பட்ட ஒரு நூலிலுள்ளதாகும். அவனது இருப்பு வெறும் காகிதத்தில் மட்டும் ஒரு எல்லைக்குட்பட்டதாக இருக்கவில்லை. மாறாக, அது பாதுகாக்கப்பட்ட ஒரு நூலில் உள்ளது. திருக்குர்ஆனின் முழு போதனைகளுக்கான அத்தாட்சி இயற்கைச் சட்டத்தின் ஒவ்வொரு நாவிலிருந்தும் வெளிப்படுகிறது. இதன் போதனை மேலும் இதன் அருட்கள் அழியக் கூடிய கட்டுக் கதைகள் அல்ல.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 53 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**என் இறைவா! நான் என்னுடைய பலவீனங்கள் மற்றும் திட்டமிடுதலில் குறைமதி கொண்டவனாகவும், மக்களுக்கு எதிரில் நான் ஆதரவில்லாமல் இருப்பதைக் குறித்தும் உன்னிடமே மன்றாடுகிறேன். என் இறைவா! நீ எல்லாரையும் விட மிக அதிகமாக கருணையுள்ளவன் ஆவாய். பலவீனமானவர்களுக்கும் ஆதரவில்லாதவர்களுக்கும் நீயே ஆதரவாவாய். மேலும் பாதுகாவலனாவாய். நான் உன்னுடைய முகத்தின் ஒளியில் அடைக்கலம் தேடுபவன் ஆவேன். ஏனென்றால் நீயே இருளைப் போக்குபவனும், மனிதர்களுக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் வெற்றியை வழங்குபனுமாவாய்**

**அவர் என்னுடைய சகோதர் ஆவார். ஏனென்றால் அவரும் அல்லாஹ்வின் நபியாவார். நானும் அல்லாஹ்வின் நபியாவேன்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களின் திருமணத்தை ஸைனப் பின்த் ஜஹஷ் அவர்களுடன் நடத்தி வைத்தார்கள். ஆனால் இந்த திருமணம் நீண்ட காலம் நிலைக்கவில்லை. எனவே ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஸைனப் அவர்களுக்கு தலாக் கொடுத்தார்கள். இந்த திருமணம் ஒரு வருடம் அல்லது அதை விட கொஞ்சம் அதிக நாள் நீடித்தது. பிறகு நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹஷ் அவர்களை திருமணம் செய்தார்கள்**

**ஷஃபான் மாதம் 5 ஆம் ஹிஜ்ரி ஆண்டு நடைபெற்ற பனி முஸ்தலிக் போருக்கு சில நாட்களுக்கு முன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸைனப் பின்த் ஜஹஷ் அவர்களை திருமணம் செய்தார்கள்**

**இறைவனது கட்டளையினால் தான் இந்த திருமணம் நடந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. வானத்தில் இந்த நிக்காஹ் ஓதப்பட்டது என்றும் சொல்லாம். ஆனால் ஷரீஅத்தின்படி வெளிப்படையான திருமண நிகழ்ச்சி நடத்துவதும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு கட்டளையாகும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆகுமானவற்றிலேயே இறைவனுக்கு பிடிக்காத ஒன்று தலாக் ஆகும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையும், கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசம் ஆகியவற்றில் தம்மையே மாய்த்துக் கொண்டவரும், பத்ர் போர் சஹாபியுமான ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) மற்றும் அவர்களது மனைவியான ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) ஆகியோரின் வாழ்க்கையிலிருந்து உள்ளத்தை ஈர்க்கக்கூடிய சம்பவங்கள்**

**உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹஷ் (ரலி) அவர்களின் நிக்காஹ் தொடர்பான விளக்கம்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 14 ஜுன் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **14 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் சம்பவங்களை நான் கடந்த குத்பாவில் எடுத்துக் கூறி வந்தேன். இது தொடர்பாக தாயிஃப் நகருக்கு பயணம் மேற்கொண்ட சம்பவம் எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இந்த பயணத்தில் ஸைது பின் ஹாரிஸா அவர்களும் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். தாயிஃபின் இந்த பயணம் குறித்த இன்னும் சில விளக்கங்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள். அதன் அடிப்படையில் நான் இப்போது சிலவற்றை எடுத்துக் கூறுகிறேன்.

ஷுஅப் அபி தாலிப் என்ற இடத்திலிருந்து வெளியேறிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃபிற்குப் பயணம் மேற்கொண்டார்கள். ஷுஅப் அபி தாலிபிலிருந்து அவர்கள் விடுபட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய செயல்பாடுகளில் ஓரளவு சுதந்திரம் கிடைத்தது. எனவே அவர்கள் தாயிஃபிற்குச் சென்று அங்குள்ள மக்களை இஸ்லாத்தின்பால் அழைக்க எண்ணினார்கள். தாயிஃப் ஒரு பிரபலமான நகரம். இது மக்காவிலிருந்து தென் கிழக்கு திசையில் 40 மைல் தொலைவில் உள்ளது. அக்காலத்தில் பனு சகீஃப் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு வசித்து வந்தனர். காபாவின் சிறப்புகள் நீங்கலாகப் பார்த்தால் தாயிஃப் மக்காவிற்குச் சமமான ஒரு பிரசித்திப்பெற்ற நகரமாகும். தாயிஃபில் மிகப்பெரிய பணக்காரர்கள் வசித்து வந்தார்கள். தாயிஃபின் இந்த சிறப்புகளை மக்காவாசிகளும் ஏற்றிருந்தார்கள். எனவேதான் மக்காவாசிகளின் இந்தக் கூற்றை திருக்குர்ஆனிலும் அல்லாஹ் எடுத்துக் கூறுகின்றான்.

لَوْلَا نُزِّلَ هٰذَا الْقُرْاٰنُ عَلٰى رَجُلٍ مِّنَ الْقَرْيَتَيْنِ عَظِيْمٍ (43:32)

அதாவது இந்தக் குர்ஆனானது இறைவன் புறமிருந்து இறக்கப்பட்டிருக்குமென்றால் மக்கா அல்லது தாயிஃபின் ஏதாவதொரு ஒரு பெரிய மனிதர் மீது ஏன் இறக்கப்படவில்லை? என்று அவர்கள் கேட்டனர்.

நபித்துவத்தின் பத்தாம் ஆண்டு ஷவ்வால் மாதம் நபி (ஸல்) அவர்கள் தாயிஃபிற்குச் சென்றார்கள். சில அறிவிப்புகளில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனியாகச் சென்றார்கள் என்றும், சில அறிவிப்புகளில் ஸைது பின் ஹாரிஸா அவர்களும் உடனிருந்ததாக வருகிறது. அங்கு அவர்கள் 10 நாட்கள் தங்கியிருந்தார்கள். நகரத்தின் பல தலைவர்களை ஒவ்வொருவராகச் சென்று சந்தித்தார்கள். மக்காவைப் போன்றே இந்த நகரத்திற்கும் அந்த நேரத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் அதிர்ஷ்டம் இல்லை. அனைவரும் நிராகரித்தது மட்டுமின்றி ஏளனமும் செய்தார்கள்.

இறுதியில் தாயிஃபின் மிகப்பெரிய தலைவரான அப்தே யாலீல் இன்னொரு நபிமொழியில் இப்னு அப்தே யாலீல் என்ற பெயரும் வருகிறது. அவரிடம் சென்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை இஸ்லாத்தின்பால் அழைத்தார்கள். ஆனால் அவரும் பகிரங்கமாக நிராகரித்து விட்டார். மேலும் ஏளனத்துடன் இவ்வாறு கூறினார்:

நீங்கள் உண்மையாளர் என்றால் உங்களிடம் பேசுவதற்கு எனக்குத் தகுதி இல்லை. நீங்கள் பொய்யர் என்றால் உங்களிடம் பேசுவதில் எந்தப் பலனும் இல்லை.

நகரத்தின் இளைஞர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கருத்துக்கள் விளைவை ஏற்படுத்தி விடுமோ என்ற எண்ணத்தின் காரணமாக அன்னாரிடம் நீங்கள் இங்கிருந்து சென்று விடுங்கள். ஏனென்றால் இங்கு உங்களுடைய பேச்சை யாரும் கேட்கப் போவதில்லை என்று கூறினார். அதன் பிறகு அந்த தீயவன் நகரத்தில் தெருக்களில் வீணாகச் சுற்றித் திரிபவர்களை அன்னாருக்குப் பின்னால் ஏவி விட்டான். நபி (ஸல்) அவர்கள் நகரத்திலிருந்து வெளியேறியபோது இவர்கள் கூச்சலிட்டவாறு, அன்னாருக்குப் பின்னால் துரத்திச் சென்றார்கள். மேலும் அன்னார் மீது கல்லெறியத் தொடங்கினார்கள். இதனால் அன்னாருடைய உடல் முழுவதும் இரத்தத்தால் நனைந்தது.

முதலில் கூறிய அறிவிப்பில் ஸைது பின் ஹாரிஸா அவர்களும் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள் என்று வருகிறது. அவர்கள் கல்லெறிந்தபோது அதனைத் தடுத்தார்கள். இதனால் அவர்களுடைய தலையிலும் கல்லடி பட்டது. இவ்வாறு மூன்று மைல் தூரம் வரை இந்த மக்கள் நபி (ஸல்) அவர்களை ஏசிப்பேசியவாறும், கல்லெறிந்தவாறும் பின்னாலேயே சென்றார்கள். தாயிஃபிலிருந்து மூன்று மைல் தொலைவில் மக்காவின் ஒரு தலைவர் உத்பா பின் ரபீஆவின் ஒரு தோட்டம் இருந்தது. நபி (ஸல்) அவர்கள் அங்கு வந்து அடைக்கலம் புகுந்தார்கள். அநீதியிழைத்த மக்கள் சோர்வடைந்து திரும்பிச் சென்று விட்டனர். அங்கு ஒரு நிழலில் நின்று கொண்டு நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்தார்கள்.

اَللّٰھُمَّ اِلَیْكَ اَشْكُوْ ضُعْفَ قُوَّتِیْ وَ قِلَّةَ حِیْلَتِیْ وَھَوَانِیْ عَلَی النَّاسِ۔
اَللّٰھُمَّ یَاأَرْحَمَ الرَّاحِمِیْنَ اَنْتَ رَبُّ الْمُسْتَضْعَفِیْنَ وَاَنْتَ رَبِّیْ

அதாவது என் இறைவா! நான் என்னுடைய பலவீனங்கள் மற்றும் திட்டமிடுதலில் குறைமதி கொண்டவனாகவும், மக்களுக்கு எதிராக நான் ஆதரவில்லாமல் இருப்பதைக் குறித்தும் உன்னிடமே மன்றாடுகிறேன். என் இறைவா! நீ எல்லாரையும் விட மிக அதிகமாக கருணையுள்ளவன் ஆவாய். பலவீனமானவர்களுக்கும் ஆதரவில்லாதவர்களுக்கும் நீயே ஆதரவாவாய். மேலும் பாதுகாவலனாவாய். நான் உன்னுடைய முகத்தின் ஒளியில் அடைக்கலம் தேடுபவன் ஆவேன். ஏனென்றால் நீயே இருளை போக்குபவனும், மனிதர்களுக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் வெற்றியை வழங்குபவனாவாய்.

உத்பா மற்றும் ஷீபா ஆகியோர் அப்போது அந்த தோட்டத்தில் இருந்தனர். நபி (ஸல்) அவர்களை இந்த நிலையில் பார்த்த அவர்கள் தமது தூரத்து உறவினர் என்ற அடிப்படையிலோ அல்லது தமது சமுதாய உணர்வின் அடிப்படையிலோ அல்லது இனம் புரியாத காரணத்தினாலோ தமது ஒரு கிறிஸ்தவ அடிமையாகிய அத்தாஸ் என்ற பெயருடைய ஒருவரது கையில் கொஞ்சம் திராட்சைப் பழங்களைக் கொடுத்து நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள்.

அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டு, அத்தாஸிடம், நீர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? நீ எந்த மதத்தைப் பின்பற்றுகிறாய்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், நான் நினேவா ஊரைச் சேர்ந்தவன். நான் கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவன் என்று கூறினார்.

மேலும் அன்னார் (ஸல்), இறைவனின் தூய அடியார் யூனுஸ் பின் மதாவின் ஊராகிய அதே நினேவா பட்டனத்தைச் சார்ந்தவரா? என்று கேட்டார்கள். அதற்கு அத்தாஸ், யூனுஸைப் பற்றி உங்களுக்கு எப்படி தெரியும்? என்று கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்), அவர் என்னுடைய சகோதரர் ஆவார். ஏனென்றால் அவரும் அல்லாஹ்வின் நபியாவார். நானும் அல்லாஹ்வின் நபியாவேன் என்று கூறினார்கள்.

பிறகு அவருக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அன்னார் (ஸல்) எட்ட வைத்தார்கள். அது அவரிடம் நல்ல விளைவை ஏற்படுத்தியது. அவர் நபி (ஸல்) அவர்களிடம் கலப்பற்றத் தன்மையை வெளிப்படுத்தியவாறு அன்னாரின் கையை முத்தமிட்டார். இந்தக் காட்சியைத் தூரத்தில் நின்றவாறே உத்பாவும், ஷீபாவும் பார்த்துக் கொண்டிருந்தனர். அத்தாஸ் அவர்களிடம் திரும்பிச் சென்றதும், அவர்கள் இருவரும், உமக்கு என்னவாயிற்று? நீர் ஏன் அவரது கையை முத்தமிட்டீர் என்று கேட்டனர். இந்த நபர் உமது மார்க்கத்தை அழித்து விடுவார். உமது மார்க்கமோ அவரது மார்க்கத்தை விடச் சிறந்தது என்று கூறினர்.

கொஞ்ச நேரம் அந்த தோட்டத்தில் நபி (ஸல்) அவர்கள் ஓய்வெடுத்த பிறகு அங்கிருந்து சென்றார்கள். நஹ்லா என்ற இடத்தை அடைந்தார்கள். அது மக்காவிலிருந்து சிறிது தூரத்திலுள்ள இடமாகும். அங்கு சில நாட்கள் தங்கினார்கள். பிறகு நஹ்லாவிலிருந்து ஹிரா மலைக் குன்றிற்கு வந்தார்கள். தாயிஃப் பயணமானது வெளிப்படையாகத் தோல்வியாக அமைந்ததன் காரணமாக மக்காவாசிகளுக்குத் தைரியம் ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தினால் முத்யிம் பின் அதீ என்பவருக்குத் தூது அனுப்பினார்கள். அதாவது நான் மக்காவிற்குள் வர விரும்புகின்றேன். இதற்காக நீர் எனக்கு உதவி செய்ய முடியுமா? என்று கேட்டார்கள்.

முத்யிம் காஃபிராக இருந்தார். ஆனால் அவர் இயல்பில் நல்லவராக இருந்தார். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் ஒருவர் அடைக்கலம் தேடி உதவி கேட்டால் அவருக்கு உதவி செய்யாமல் இருப்பது அரபு நாட்டின் சான்றோர்களின் இயல்பிற்கு மாற்றமானதாகும். அறிவீனமான அந்தக் காலகட்டத்திலும் அரபு மக்கள் இந்த சிறப்பு இயல்பைக் கொண்டிருந்தனர்.

எனவே முத்யிம் தமது மகன்கள் மற்றும் உறவினர்களை உடன் அழைத்துக் கொண்டார். அவர்கள் அனைவரும் ஆயுதம் ஏந்தியவாறு காபாவின் பக்கத்தில் நின்றார்கள். அதன் பிறகு நபி (ஸல்) அவர்களை வரும்படித் தூது அனுப்பினார். நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம் என்றார். பின்னர் நபி (ஸல்) அவர்கள் வந்தார்கள். காபாவை வலம் வந்தார்கள். அங்கிருந்த முத்யிம் மற்றும் அவரது மகன்களுடைய வாள்களின் நிழலின்கீழ் தமது வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

வழியில் அபூஜஹில் முத்யிமை இந்த நிலையில் பார்த்து மிக ஆச்சரியத்துடன், நீ முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அடைக்கலம் மட்டும்தான் கொடுத்துள்ளீரா? அல்லது அவரைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டீரா? என்று கேட்டான். அதற்கு முத்யிம், நான் ஆதரவு மட்டும்தான் கொடுத்துள்ளேன். அவரைப் பின்பற்றவில்லை என்று கூறினார். அதற்கு அபூஜஹில், அப்படியென்றால் பரவாயில்லை என்று கூறினான்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 181–183)

எவ்வாறிருப்பினும், முத்யிம் நிராகரிப்பின் நிலையிலேயே மரணமடைந்தார். இது அவர் செய்த ஒரு நன்மையாகும். ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வந்ததும் ஹஸ்ரத் குல்ஸூம் பின் ஹதமிடம் தங்கினார்கள். இன்னும் சிலர், சஅது பின் ஹைஸ்மா அவர்களிடம் தங்கியதாகவும் கூறுகின்றனர். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸைது அவர்களுடன் உஸைது பின் ஹஸீர்

அவர்களுடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். ஹம்ஸாவுடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தியதாகவும் சிலர் எழுதியுள்ளனர். அதாவது ஹம்ஸாவை இவருக்கு சகோதரராக ஆக்கினார்கள். இதன் காரணமாகவே உஹது போர் நாளன்று ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் போரின் தருணத்தில் ஹஸ்ரத் ஸைது அவர்களுக்கு வஸிய்யத் செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 21 ஸைது பின் ஹாரிஸா – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 6 ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் மிக விளக்கமாக எழுதியுள்ளார்கள்.

மதீனாவை வந்தடைந்த சில நாட்களுக்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள் ஸைது பின் ஹாரிஸா அவர்களிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் சில நாட்களிலேயே தம்முடைய குடும்பத்தாரை அழைத்துக் கொண்டு பாதுகாப்பாக மதீனா வந்தடைந்தார்கள். அவர்களுடன் அபூபக்ரின் மகன் அப்துல்லாஹ்வும், அபூபக்ர் அவர்களின் குடும்பத்தாரை அழைத்துக் கொண்டு மதீனா வந்து சேர்ந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 269)

ஹஸ்ரத் பரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் துல்கஅதா மாதத்தில் உம்ரா செய்ய எண்ணினார்கள். அப்போது மக்காவாசிகள் மக்காவிற்குள் நுழைவதை விட்டு தடுத்து விட்டார்கள். இறுதியில் இந்த நிபந்தனையின் அடிப்படையில் அவர்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்தார்கள். அடுத்த வருடம் உம்ரா செய்ய வருவோம். மேலும் மக்காவில் மூன்று நாட்கள் தங்குவோம். என்ற நிபந்தனையின் பேரில் ஒரு ஒப்பந்தம் செய்தார்கள்.

ஒப்பந்தம் எழுதும்போது இவ்வாறு எழுதினார்கள். இந்த நிபந்தனைகள் அல்லாஹ்வின் தூதராகிய முஹம்மது (ஸல்) அவர்களால் வகுக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்படுகிறது என்று எழுதினார்கள். நாங்கள் இதனை ஏற்றுக் கொள்ளவதில்லை என்று மக்காவாசிகள் கூறினர். நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதை நாங்கள் நம்பினால் பிறகு உங்களை நாங்கள் ஒருபோதும் தடுத்திருக்க மாட்டோம் என்றார்கள். எங்களைப் பொருத்தவரை நீங்கள் முஹம்மது பின் அப்தில்லாஹ் ஆவீர்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், நான் அல்லாஹ்வின் தூதரும் ஆவேன். அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மதும் ஆவேன் என்று கூறினார்கள்.

ரஸூலுல்லாஹ் என்ற சொல்லை இங்கிருந்து அழித்து விடுங்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அலி அவர்கள் நான் ஒருபோதும் அவ்வாறு செய்ய மாட்டேன் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களுக்கு கிடைத்துள்ள இந்த சிறப்புப் பெயரை நான் ஒருபோதும் அழிக்க முடியாது என்றார்கள். அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள இந்த சிறப்புப் பெயராகிய ரஸூலுல்லாஹ் என்ற பட்டத்தை நான் அழிக்க மாட்டேன் என்றார்கள்.

எழுதப்பட்ட அந்த காகிதத்தை அன்னார் வாங்கினார்கள். நபி (ஸல்) அவர்கள் எழுதத் தெரியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்: இந்த நிபந்தனைகள் முஹம்மது பின் அப்தில்லாஹ் வரையறுத்ததாகும். மக்காவிற்கு நாங்கள் ஆயுதம் ஏதும் கொண்டு வர மாட்டோம். வாள்களைத் தவிர. அதுவும் உரைக்குள் தான் இருக்கும். மக்காவாசிகள் எங்களுடன் வர விரும்பினாலும் அவர்களில் யாரையும் எங்களுடன் அழைத்துச் செல்ல மாட்டோம். மேலும் எங்களுடைய தோழர்களில் யாரும் மக்காவில் தங்க விரும்பினால் அவர்களை மக்காவில் தங்குவதை விட்டு தடுக்க மாட்டோம்.

ஆக இந்த உடன்படிக்கைக்கு இணங்க அடுத்த ஆண்டு நபி (ஸல்) அவர்கள் மக்காவிற்குள் நுழைந்தார்கள். மூன்று நாட்கள் முடிவடைந்த நிலையில் குரைஷிகள் ஹஸ்ரத் அலி அவர்களிடம் வந்தார்கள். உங்களுடைய தோழர் முஹம்மது அதாவது நபி (ஸல்) அவர்கள் இங்கிருந்து சென்றுவிட வேண்டும். அதாவது மூன்று நாட்கள் தங்குவதற்கு நிபந்தனை வகுக்கப்பட்டிருந்தது. அந்த மூன்று நாட்கள் கழிந்திருந்தன. எனவே அன்னார் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸாவின் மகள் அம்மாரா என்று ஒரு அறிவிப்பிலும், இன்னொரு அறிவிப்பில் அமாமா என்றும், இன்னொரு அறிவிப்பில் அமதுல்லாஹ் என்றும் வருகிறது. அவர்கள் நபி (ஸல்) அவர்களை, என் தந்தையின் சகோதரரே! என் தந்தையின் சகோதரரே! என்று கூறியவாறு பின்தொடர்ந்து வந்தார்கள். ஹஸ்ரத் அலி அவர்களை பிடித்து விட்டார்கள். அவர்களின் கையை பிடித்தார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (அலை) அவர்களிடம் தந்தையின் சகோதரரின் மகளை நீங்கள் அழைத்துக் கொள்ளுங்கள் என்றார்கள். அவர்களும் தம்முடன் பயணத்தில் அழைத்துச் சென்றார்கள்.

இப்போது ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் ஸைது மற்றும் ஹஸ்ரத் ஜாஃபர் ஆகியோர் ஹம்ஸாவின் மகளைக் குறித்து வாக்குவாதம் செய்தார்கள். ஹஸ்ரத் அலி அவர்கள், நானே இவரை அழைத்துக் கொண்டேன். இவர் என் தந்தையின் சகோதரரின் மகள் ஆவார் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் ஜாஃபர் அவர்கள், இவர் என்னுடைய தந்தையின் சகோதரரின் மகள் ஆவார். மேலும் இவருடைய தாயின் சகோதரி அஸ்மா பின்த் உமைஸ் எனது மனைவி ஆவார்கள் என்றார்கள். ஹஸ்ரத் ஸைது அவர்கள், இவர் என்னுடைய சகோதரரின் மகள் ஆவார். நபி (ஸல்) அவர்கள் இவருடன் எனது சகோதரத்துவத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்று கூறினார்கள்.

பிறகு நபி (ஸல்) அவர்கள் இவரைக் குறித்து இவ்வாறு தீர்ப்பு வழங்கினார்கள். அதாவது இவர் தனது தாயின் சகோதரியுடன் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அதாவது ஜாஃபருடன் இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

தாயின் சகோதரி தாயிக்கு சமமானவர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் அலி அவர்களிடம், நீர் என்னைச் சார்ந்தவர் ஆவீர். நான் உம்மைச் சேர்ந்தவன் ஆவேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஜாஃபர் அவர்களிடம், நீர் உமது அழகிலும், நடத்தையிலும் எனக்கு ஒப்பானவராக இருக்கின்றீர் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் ஸைது அவர்களிடம், நீர் எனது சகோதரரும், எனது நண்பரும் ஆவீர் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலி அவர்கள், நீங்கள் ஹம்ஸாவின் மகளை திருமணம் செய்யக் கூடாதா? எனக் கேட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள், இவர் எனது பால்குடி சகோதரரின் மகள் ஆவார். நான் அவருடைய தந்தையின் சகோதரர் ஆவேன் என்று கூறினார்கள். இந்த அறிவிப்பு புகாரி மற்றும் சீரத்துல் ஹலபிய்யாவில் வந்துள்ளது.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி பாப் உம்ரத்துல் கஸா ஹதீஸ் எண் 4251 & அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 95

பாப் ஸிக்ருல் மகாஸிய்யா (ஸல்) – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா அவர்கள் ஹஸ்ரத் உம்மே அய்மனை திருமணம் செய்தார்கள். ஹஸ்ரத் உம்மே அய்மனின் பெயர் பரகா ஆகும். அய்மன் என்ற தனது மகனின் காரணமாக உம்மே அய்மன் என்ற சுட்டுப் பெயரால் பிரபல்யமானார்கள். அவர்கள் அபிசீனியாவைச் சேர்ந்தவர் ஆவார்கள். நபி (ஸல்) அவர்களின் தந்தை ஹஸ்ரத் அப்துல்லாஹ்வின் அடிமையாக இருந்தார்கள். அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஆமினாவுடன் வசித்து வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு 6 வயது இருக்கும்போது அவர்களின் தாயார் தம்முடைய சொந்த வீட்டைப் பார்த்து வருவதற்காக மதீனாவிற்குச் செல்லும்போது ஹஸ்ரத் உம்மே அய்மன் சேவை செய்யக்கூடியவராக உடன் இருந்தார்கள். அப்போது அவர்கள் சிறிய வயதுடையவராக இருந்திருப்பார்கள். மதீனாவிலிருந்து திரும்பி வருகின்ற வழியில் அப்வா என்ற இடத்தை அடைந்தார்கள். இந்தஇடம் மஸ்ஜிது நபவியிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ளது. இங்கு ஹஸ்ரத் ஆமினா வஃபாத்தானார்கள். ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்கள் மக்காவிலிருந்து சென்ற அதே இரண்டு ஒட்டங்களில் நபி (ஸல்) அவர்களை மக்காவிற்கு அழைத்து வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத் வாதம் செய்தற்கு முன்பாக மக்காவில் ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்களுக்கு உபைத் பின் ஸைது அவர்களுடன் திருமணம் நடந்தது. அவரும் அபிஸீனியாவைச் சேர்ந்த ஓர் அடிமை ஆவார். இவர்களுக்கு ஒரு மகன் பிறந்தார். அவருடைய பெயர் அய்மன் ஆகும். ஹஸ்ரத் அய்மன் அவர்கள் ஹுனைன் போரில் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் உம்மே அய்மனின் கணவர் வஃபாத்தான பிறகு அவர்கள் ஸைது அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது: ஹஸ்ரத் உம்மே அய்மன் நபி (ஸல்) அவர்களுடன் மிகவும் பரிவுடன் நடந்து வந்தார்கள். அவர்களை நன்றாக கவனித்து வந்தார்கள். எவர் சுவர்க்கத்தின் பெண்ணைத் திருமணம் செய்து மகிழ்ச்சியாக இருக்க விரும்புகின்றாரோ அவர் உம்மே அய்மனை திருமணம் செய்து கொள்ளட்டும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா அவர்கள் அவரை திருமணம் செய்து கொண்டார்கள். இவர்கள் மூலம் ஹஸ்ரத் உஸாமா பிறந்தார்கள். ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்கள் முஸ்லிம்களுடன் இணைந்து அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அங்கிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். உஹது போரில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் மக்களுக்கு தண்ணீர் வழங்கி வந்தார்கள். மேலும் காயமுற்றவர்களைக் கவனித்து வந்தார்கள். கைபர் போரிலும் பங்கு பெறுவதற்கான தவ்ஃபீக் இவர்களுக்கு கிடைத்தது.

ஹிஜ்ரி 23 ஆவது ஆண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதானபோது ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்கள் மிக அதிகமாக அழுதார்கள். ஏன் அழுகின்றீர்கள்? என மக்கள் கேட்டனர். அதற்கு அவர்கள், ஹஸ்ரத் உமர் அவர்களின் ஷஹாதத்தினால் இஸ்லாம் பலவீனமாகி விட்டது என்று கூறினார்கள். ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்களின் மரணம் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத்தின் துவக்க காலகட்டத்தில் நிகழ்ந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 179–181 உம்மே அய்மன், தொகுதி 1 பக்கம் 93–94 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 1 பக்கம் 77 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 7 பக்கம் 291 உம்மே அய்மன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 102 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஸைது அவர்கள் ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்களைத் திருமணம் செய்து கொண்டது தொடர்பாக பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார். அதன் சுருக்கம் இதுவாகும்.

அதாவது, நபி (ஸல்) அவர்களுடைய தந்தையார் மரணத்திற்குப் பிறகு அவர்களின் அடிமைகளில் ஒருவரான ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு வாரிசு என்ற அடிப்படையில் கிடைத்தார்கள். பெரியவராக வளர்ந்ததும் அன்னார் அவர்களை விடுதலை செய்து விட்டார்கள். அவர்களுடன் மிகவும் கருணையோடு நடந்து வந்தார்கள். பிறகு நபி (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாகிய ஸைது பின் ஹாரிஸாவோடு உம்மே அய்மனுக்குத் திருமணம் நடந்தது. இவர்கள் மூலம் உஸாமா பின் ஸைது பிறந்தார்கள். இவர்களை அல் ஹுப்பு இப்னுல் ஹுப்பு – அன்பிற்குரியவரின் அன்பான மகன் என்று அழைக்கப்பட்டார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 75 உஸாமா பின் ஸைது (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

நபி (ஸல்) அவர்கள் உம்மே அய்மனை என் தாயே என்று அழைத்து வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மே அய்மனைப் பார்க்கும்போது, இவர்கள் என்னுடைய குடும்பத்தில் மீதமுள்ளவர் ஆவார் என்று கூறினார்கள். இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உம்மே அய்மனைப் பார்த்து இவர் எனது உண்மையான தாய்க்குப் பிறகு அடுத்தபடியான தாய் ஆவார்கள் என்று கூறினார்கள். இவர்களை சந்திப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் இவர்களுடைய வீட்டிற்கும் சென்று வந்தார்கள்.

(தாரீஹுல் திப்ரா தொகுதி 13 பக்கம் 375 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 7 பக்கம் 291 உம்மே அய்மன் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

முஹாஜிர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு வரும்போது அவர்களது கைகளில் எதுவும் கிடையாது. அன்ஸார்கள் நிலம் மற்றும் சொத்துக்கள் உடையவர்களாக இருந்தார்க்கள். ஒவ்வொரு வருடமும் தமது தோட்டத்தின் கனிகளை முஹாஜிர்களுக்கு கொடுப்பதாக அன்ஸார்கள் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். அன்ஸார்களே அந்த தோட்டத்தில் பணி புரிவார்கள். தோட்டத்தின் கனிகளையும் முஹாஜிர்களுக்கு கெடுப்பார்கள். ஆனால் அந்த தோட்டத்தில் உழைப்பதும், அதில் வேலை செய்வதையும்., மேலும் பராமரிக்கும் பணியையும் நாங்களே செய்வோம். இந்த வேலைகளை முஹாஜிர்களுக்குக் கொடுக்க மாட்டோம் என்று ஒப்பந்தம் செய்திருந்தனர்.

ஹஸ்ரத் அனஸ் அவர்களின் தாயார் ஹஸ்ரத் உம்மே சுலைம் ஆவார்கள். இவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபி தல்ஹாவின் தாயாரும் ஆவார்கள். ஹஸ்ரத் அனஸ் அவர்களின் தாயார் நபி (ஸல்) அவர்களுக்கு சில பேரீத்தம் மரங்களை கொடுத்தார்கள். நபி (ஸல்)

அவர்கள் இந்த மரங்களை உஸாமா பின் ஸைதின் தாயாராகிய உம்மே அய்மனுக்குக் கொடுத்திருந்தார்கள்.

இப்னு ஷிஹாப் அவர்கள் கூறி வந்தார்கள்: எனக்கு ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் கைபர் போரிலிருந்து திரும்பி மதீனாவிற்கு வந்தார்கள். அப்போது முஹாஜிர்கள் அன்ஸார்களிடமிருந்தது. பெற்ற அன்பளிப்புகளை திரும்ப ஒப்படைத்தார்கள். அவர்கள் தம்முடைய தோட்டங்களிலிருந்து கனி தரக்கூடிய மரங்களைக் கொடுத்திருந்தார்கள். இப்போது அவர்களுக்கு சிறிது செல்வங்கள் மற்றும் நிலங்கள் கிடைத்திருந்தன. நபி (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அனஸ் அவர்களின் தாயார் கொடுத்திருந்த பேரீத்த மரங்களை திரும்ப ஒப்படைத்தார்கள்.இதற்குப் பகரமாக நபி (ஸல்) அவர்கள் உம்மே அய்மன் அவர்களுக்கு தம்முடைய தோட்டத்திலிருந்து சிறிது மரங்களை வழங்கினார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஹிபா ஹதீஸ் எண் 2630)

புகாரியின் ஓர் அறிவிப்பில் இது பற்றிய விளக்கங்கள் இவ்வாறு வந்துள்ளன. ஹஸ்ரத் அனஸ் அவர்கள்அறிவிக்கின்றார்கள்: ஒரு சஹாபி நபி (ஸல்) அவர்களுக்காக பேரீத்தம் மரங்களின் சிலவற்றை ஒதுக்கி வைத்து விட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் குரைலா மற்றும் நஸீர் கோத்திரத்தை வென்ற பிறகு அவர்களுக்கு இதன் தேவை இல்லாமல் போயிற்று. எனவே நான் நபி (ஸல்) அவர்களுக்கு கொடுத்திருந்த மரங்களிலிருந்து சிலவற்றை திரும்பத் தரும்படி கூற வேண்டும் என்று எனது வீட்டிலுள்ளவர்கள் என்னிடம் கூறினார்கள். ஏனென்றால் இது இனி இவர்களுக்குத் தேவையில்லை என்றார்கள். இதனை ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இந்த மரங்களை ஹஸ்ரத் உம்மே அய்மனுக்குக் கொடுத்திருந்தார்கள். எனவே அவர்கள் இதனைக் கேட்டதும் எனது கழுத்தில் துணியைப் போட்டார்கள். நான் இதனை ஒருபோதும் திரும்பத் தர மாட்டேன் என்றார்கள். வணக்கத்திற்கு உரியவன் அந்த ஓர் இறைவனைத் தவிர வேறு யாருமில்லை. அவன் மீது ஆணையாக! இந்த மரம் உங்களுக்கு ஒருபோதும் கிடைக்காது. இவற்றை நபி (ஸல்) அவர்கள் எனக்கு வழங்கினார்கள் என்றோ இதைப் போன்றோ கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் உம்மே அய்மனிடம், பரவாயில்லை. இதனை திருப்பிக் கொடுத்து விடுங்கள். உங்களுக்கு வழங்கப்பட்ட இதே அளவு மரங்களை நான் உங்களுக்குத் தருகிறேன் என்று கூறினார்கள். மேலும் இதைப் போன்ற இன்னும் பத்து மடங்கு அதிகமாகத் தருவேன் என்று கூறினார்கள். அதன் பிறகு இந்த மரங்கள் திரும்பி ஒப்படைக்கப்பட்டன.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி.. ஹதீஸ் எண் 4120)

ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உம்மே அய்மன் மதீனாவிற்கு நடந்து ஹிஜ்ரத் செய்து கொண்டிருக்கையில் மிக அதிகமாக தாகம் ஏற்பட்டது. அல்லாஹ்வுடன் இவர்களுக்கு ஒரு சிறப்பான தொடர்பு இருந்தது. இவர்கள் மிகப்பெரிய பெண்மணியாக இருந்தார்கள். அந்த ஹிஜ்ரத்தின்போது அவர்களிடம் தண்ணீர் இல்லை. மேலும் வெயிலும் மிகக் கடுமையாக இருந்தது.

அவர்கள் தமது தலைக்கு மேலே ஏதோ ஒரு பொருளின் சப்தத்தைக் கேட்டார்கள். வானத்திலிருந்து அவர்கள் மீது குடத்தைப் போன்ற ஒரு பொருள் வருவதைக் கண்டார்கள். அதிலிருந்து வெண்மை நிற தண்ணீர் சொட்டுக்கள் வழிந்து கொண்டிருந்தன. அவர்கள் அதிலிருந்து தண்ணீர் அருந்தினார்கள். அதிலிருந்து தாகம் தீர தண்ணீர் குடித்தார்கள்.

இதன் பிறகு அவர்களுக்கு தாகத்தின் உணர்வே ஒருபோதும் ஏற்பட்டதில்லை என்று கூறினார்கள். தாகம் ஏற்படும் நோன்பின் காலத்தில் கூட நான் தாகத்துடன் இருந்ததில்லை என்று கூறினார்கள். சஹாபாக்களின் சம்பவங்களை எடுத்துரைக்கையில் இந்தப் பெண்மணிகளில் உயர்ந்த அந்தஸ்தும் நமக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக பத்ர் போர் சஹாபாக்களில் எந்த பெண்களுக்குத் தொடர்பு இருக்கின்றதோ நான் அவர்களுடைய சம்பவங்களையும் இத்துடன் சேர்த்து எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றேன்.

ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்கள் திக்கிப் பேசுபவர்களாக இருந்தார்கள். سَلَامُ اللهِ عَلَيْكُمْ என்று சொல்லும் பழக்கம் முதலில் இருந்து வந்தது. ஹஸ்ரத் உம்மே அய்மன் யாரையாவது சந்திக்கச் சென்றால் سَلَامُ اللهِ عَلَيْكُمْ என்று கூறுவதற்குப் பகரமாக தமது திக்குவாயின் காரணமாக سَلَامٌ عَلَيْكُمْ அல்லது اَلسَّلَامُ عَلَيْكُمْ என்று கூறுவதற்கு நபி (ஸல்) அவர்கள் இவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தார்கள். இப்போது இதுவே பழக்கத்தில் இருந்து வருகிறது.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்கள் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது உம்மே அய்மன் அன்னாருக்கு அருகில் இருந்தார்கள். அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதரே! எனக்கும் தண்ணீர் தாருங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள். இதைக் கேட்டதும் நபி (ஸல்) அவர்கள் உமக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று நீர் கூறுகின்றீரா? என்று நான் கேட்டேன். நான் அன்னாருக்கு அதிகமாக தொண்டு செய்யவில்லையா? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீர் உண்மையைக் கூறினீர் என்றார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு தண்ணீர் கொடுத்தார்கள்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 1 பக்கம் 77–78 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் வஃபாத்தான பிறகு ஹஸ்ரத் உம்மே அய்மன் அழுது கொண்டே இருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? என்று கேட்கப்பட்டது. நபி (ஸல்) அவர்களும் கண்டிப்பாக இறந்து விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், வஹீ நம்மிடமிருந்து எடுக்கப்பட்டு விட்டதே என்று எண்ணி நான் அழுகின்றேன்.

(அஸதுல் காபா தொகுதி 7 பக்கம் 291 உம்மே அய்மன் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது நபி (ஸல்) அவர்களுடைய மரணத்தின் துக்கம் ஒருபுறம் இருக்கின்றது. அத்துடன் அல்லாஹ்வின் புத்தம் புதிய வஹீ இப்போது நிறுத்தப்பட்டு விட்டதே. எனவே இதன் காரணமாக எனக்கு அழுகை வருகிறது என்றார்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களிடம், என்னுடன் வாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்களைச் சந்தித்து வந்தார்கள். நாமும் சந்தித்து வரலாம் என்று கூறினார்கள்.

நாங்கள் அவர்களிடம் சென்றதும் அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். நீங்கள் ஏன் அழுகின்றீர்கள் என்று நாங்கள் கேட்டோம். அல்லாஹ்வின் தூதருக்காக அல்லாஹ்விடம் இருப்பது மிகச் சிறந்தது என்று கூறினோம். அல்லாஹ்விடம் அவனுடைய தூதருக்காக இருப்பது மிகச் சிறந்தது என்பதை நான் அறியாத காரணத்தால் அழவில்லை. நான் கூறியது போன்று இவர்கள் நன்மையில் மிகச் சிறந்தவர்களாக இருந்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: வானத்திலிருந்து வஹீ வருவது நின்று விட்டது என்பதற்காகவே நான் அழுகின்றேன் என்று கூறி அந்த இருவரையும் அழ வைத்து விட்டார்கள்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயிலுஸ் சஹாபா.. உம்மே அய்மன் ஹதீஸ் எண் 2454)

ஹஸ்ரத் உஸாமா மற்றும் ஹஸ்ரத் ஸைது ஆகிய இருவருடைய நிறமும் மிகவும் வேறுபட்டிருந்தது. தாயார் அபிஸீனியாவைச் சேர்ந்தவராக இருந்தார்கள். ஆப்ரிக்காவைச் சேர்ந்தவர் ஆவார். உஸாமா வேறு இடத்தைச் சார்ந்தவராக இருந்தார். இதன் காரணமாக தந்தைக்கும் மகனுக்கும் நிறத்தில் மிகப்பெரும் வேறுபாடு இருந்தது. உஸாமாவின் நிறம் அவர்களின் தாயாரின் நிறத்தைப் போன்றதாக இருந்தது. இதன் காரணமாக சிலர் ஹஸ்ரத் உஸாமாவின் பரம்பரையை ஆட்சேபனை செய்து வந்தனர். அதாவது உஸாமா ஸைதின் மகனல்ல என்று கூறி வந்தனர். ஆட்சேபனை என்ற கருத்தில் மட்டும் இதனை முன்வைத்து வந்தார்கள். நயவஞ்சகர்களும் இவ்வாறு ஆட்சேபனை செய்தனர்.

ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் என்னிடத்தில் வந்தார்கள். அப்போது அன்னார் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

அன்னார் கூறினார்கள்: ஆயிஷாவே! முஜஸ்ஸஸ் முத்லஜி என்னிடத்தில் வந்தார். அவர் ஸைதின் மகன் உஸாமாவையும், ஹாரிஸாவின் மகன் ஸைதையும் இந்த நிலையில் கண்டார். அவர்கள் இருவர் மீது ஒரு போர்வை இருந்தது. வெப்பத்தின் காரணமாகவோ அல்லது மழையின் காரணமாகவோ அல்லது வேறு காரணத்தினாலோ ஒரு போர்வையை இரண்டு பேரும் போர்த்தியிருந்தார்கள். முகம் மறைக்கட்டிருந்தது.

அந்த போர்வையை வைத்து அவர்கள் தமது தலையை மூடியிருந்தார்கள். இவருடைய முகம் தென்படவில்லை. மேலும் இருவருடைய கால்களும் தெரிந்து கொண்டிருந்தன. கால்கள் மட்டும் வெளியே தெரிந்து கொண்டிருந்தன. இந்த கால்கள் நிச்சயமாக ஒன்று மற்றொன்றிலிருந்து வந்ததாகும். இந்த இரண்டு கால்களும் ஒன்றோடொன்று ஒத்ததாக இருக்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். உஸாமாவைப் பற்றி செய்யப்பட்ட ஆட்சேபனை இன்று விலகி விட்டது. அங்க அடையாளங்களை வைத்து உண்மையை கண்டறியும் வல்லுனர்கள் கூறுபவை சாட்சியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஃபராயிஸ்... ஹதீஸ் எண் 6771 & ஃபத்ஹுல் பாரி ஷரஹ் சஹீஹுல் புகாரி கிதாபுல் ஃபராயிஸ் ஹதீஸ் எண் 6771 தொகுதி 12 பக்கம் 58 – 1987 ஆம் ஆண்டு காஹிராவில் அச்சிடப்பட்டது)

அரபின் சூழ்நிலையில் இதுவொரு தீர்க்கமான முடிவாகும். உலகவாதிகளின் வாயை அடைப்பதற்காகவும், முனாஃபிக்களின் வாயை அடைப்பதற்காகவும் இதுவொரு ஆதாரமாக கிடைத்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஹஸ்ரத் ஸைது நபி (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமை மற்றும் வளர்ப்பு மகன் ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களின் திருமணத்தை ஸைனப் பின்த் ஜஹஷ் அவர்களுடனும் நடத்தி வைத்தார்கள். ஆனால் இந்த திருமணம் நீண்ட காலம் நிலைக்கவில்லை. எனவே ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஸைனப் அவர்களுக்கு தலாக் கொடுத்தார்கள். இந்த திருமணம் ஒரு வருடம் அல்லது அதை விட கொஞ்சம் அதிக நாள் நீடித்தது. பிறகு நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹஷ் அவர்களை திருமணம் செய்தார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 628–629 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபத்தில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இது தொடர்பாக பல்வேறு ஆதாரங்களை முன் வைத்து தருகின்ற விளக்கம் இதுவாகும்.

ஷஃபான் மாதம் 5 ஆம் ஹிஜ்ரி ஆண்டு நடைபெற்ற பனி முஸ்தலிக் போருக்கு சில நாட்களுக்கு முன்னால் நபி (ஸல்) அவர்கள் ஸைனப் பின்த் ஹஜஷ் அவர்களை திருமணம் செய்தார்கள். ஹஸ்ரத் ஸைனப் அவர்கள் நபி (ஸல்) அவர்கள் தந்தையின் சகோதரி உமைமா பின் அப்தில் முத்தலிப் அவர்களின் மகள் ஆவார்கள். மிக நல்லவர்களாகவும், இறையச்சமுடையவர்களாகவும் இருந்த போதிலும் தம்முடைய குடும்பப் பெருமைக்கான எண்ணம் அவர்களுடைய இயல்பில் ஓரளவு இருந்து வந்தது.

இதற்கெதிரில் நபி (ஸல்) அவர்களுடைய இயல்பு இப்படிப்பட்ட எண்ணத்திலிருந்து முற்றிலும் தூய்மையாக இருந்தது. ஆனால் அன்னார் குடும்ப நிலைகளை நாகரீக அடிப்படையில் மதிப்பளிப்பதற்குத் தகுதியானதாக கருதி வந்தார்கள். ஆனால் அன்னாரிடத்தில் மதிப்பிற்கான உண்மையான தரமானது, தனிப்பட்ட சிறப்பு மற்றும் அவரிடம் இருக்கின்ற இறையச்சம் மற்றும் தூய்மையை சார்ந்ததாக இருக்கிறது. திருக்குர்ஆன் கூறுகின்றது:

إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ أَتْقَاكُمْ (49:14)

அதாவது மக்களே! உங்களில் எவர் அதிக இறையச்சமுடையவரோ அவரே அதிக கண்ணியத்திற்குரியவர் ஆவார்.

ஆகவே அவர்கள் எந்த வித தயக்கமும் இல்லாமல் தம்முடைய இந்த அன்பிற்குரிய ஸைனப் பின்த் ஜஹஷ் அவர்களை தாம் விடுதலை செய்த அடிமை மற்றும் வளர்ப்பு மகனான ஸைது பின் ஹாரிஸாவிற்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார்கள். முதலில் ஸைனப் தமது குடும்பப் பெருமையை கருத்தில் கொண்டவாறு திருமணம் செய்ய விரும்பவில்லை. ஆனால் இறுதியில் நபி (ஸல்) அவர்களின் விருப்பத்தைக் கருத்தில் கொண்டவாறு திருமணத்திற்கு சம்மதித்தார்கள்.

எவ்வாறிருப்பினும் நபி (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கேற்ப அன்னாரின் முடிவிற்கேற்பவே ஸைனப் மற்றும் ஸைதின் திருமணம் நடந்தது. ஜைனப் முடிந்த அளவுக்கு நேர்மையாக இந்த திருமண பந்தத்தை கொண்டு சென்றார்கள். ஆனால் ஸைது தம்முடைய மனதில் இவ்வாறு ஒரு உணர்வை கொண்டிருந்தார்கள்.

அதாவது ஹஸ்ரத் ஜைனப் அவர்களின் உள்ளத்தில் தான் ஒரு கண்ணியமிகுந்த குடும்பத்தைச் சார்ந்தவர் என்ற எண்ணம் மற்றும் நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய உறவினர் என்ற எண்ணமும் மறைவாக இருக்கிறது என்று உணர்ந்தார்கள். மேலும் நானோ ஒரு சாதாரண சுதந்திரம் பெற்ற அடிமையாவேன். எனவே எனக்கு இந்தப்

பெண் பொருத்தமானவர் அல்ல என்ற எண்ணம் அவர்களது மனதில் எப்போதும் இருந்து வந்தது. மறுபக்கம் ஜைனப் அவர்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் தமது நிலை மிகவும் தாழ்ந்தது என்ற ஒரு உணர்வு அவர்களிடம் இருந்தது.

இந்த உணர்வானது மெல்ல மெல்ல அதிகமாகி உறுதிபெற்று அவர்களுடைய குடும்ப வாழ்வை மகிழ்ச்சியற்றதாக ஆக்கிவிட்டது. கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட ஆரம்பித்தது. பொறுத்துக் கொள்ள முடியாத இந்த நிலை அதிகரித்ததும் ஸைது பின் ஹாரிஸா நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். தாமாகவே முன்வந்து ஜைனப் அவர்களின் சில நடைமுறைகளைப் பற்றி முறையீடு செய்து அவர்களுக்கு தலாக் கொடுப்பதற்கான அனுமதியை வேண்டினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஸைது, ஜைனப் கடினமான வார்த்தைகளை உபயோகிப்பதாக புகார் கூறினார்கள். எனவே நான் அவர்களை தலாக் கொடுக்க விரும்புகின்றேன் என்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இதை அறிந்ததும் இயல்பாகவே வேதனையுற்றார்கள். ஆனால் அவர்கள் தலாக் கொடுப்பதை விட்டு ஸைதைத் தடுத்தார்கள். ஸைதின் சார்பாக திருமண பந்தத்தை நிலைத்திருக்கச் செய்வதற்காக முயற்சிப்பதில் குறைபாடு இருப்பதாக உணர்ந்து அன்னார் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அதாவது இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். இறைவனுக்கு அஞ்சியவாறு எப்படி இருந்தாலும் திருமண உறவைப் பேணி நடக்க முயற்சி செய்யுங்கள் என்று அறிவுரை கூறினார்கள். திருக்குர்ஆனில் அவர்களுடைய இந்த வார்த்தை பதிவு செய்யப்பட்டுள்ளது.

اَمۡسِكۡ عَلَيۡكَ زَوۡجَكَ وَاتَّقِ اللّٰهَ (33:38)

அதாவது ஸைதே! நீர் உமது மனைவிக்கு தலாக் கொடுக்காதீர். மேலும் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள்.

நபி (ஸல்) அவர்கள் பொதுவாகவே தலாக்கை விரும்பியதில்லை என்பதே அவர்கள் இவ்வாறு அறிவுரை கூறியதற்கான முதல் காரணம்.

ஒரிடத்தில் அன்னார் கூறினார்கள்: اَبۡغَضُ الۡحَلَالِ اِلَى اللّٰهِ الطَّلَاقُ ஆகுமானவற்றிலேயே இறைவனுக்குப் பிடிக்காத ஒன்று தலாக் ஆகும். எனவேதான் இஸ்லாத்தில் தவிர்க்க முடியாத நிலையில் இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது காரணம், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் அவர்களின் மகன் இமாம் ஜைனுல் ஆபிதீன் அலி பின் ஹுஸைன் அவர்களுடைய அறிவிப்பு இவ்வாறு வருகிறது. இமாம் ஸுஹ்ரி அவர்கள் இந்த அறிவிப்பை உறுதிபடுத்தியுள்ளார்கள். அதாவது ஸைது பின் ஹாரிஸா அவர்கள் ஜைனப் அவர்களுக்கு தலாக் கொடுத்து விடுவார்கள் என்றும் அதன் பிறகு ஜைனப் அவர்களை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்வார்கள் என்பதும் முன்னதாகவே இறைவனது வஹீயின் மூலம் நபி (ஸல்) அவர்களுக்கு தெரிந்திருந்தது.

எனவே அவர்கள் இந்த விவகாரத்தில் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்பு எதுமில்லாமல் இருக்க விரும்பினார்கள். ஜைனப் மற்றும் ஸைது இருவருக்குமிடையே இருக்கின்ற உறவு முறிவதில் தம்முடைய பங்களிப்பு எதுவும் இருக்கக்கூடாது என்பதற்காக முழுமையாக முயற்சி செய்தார்கள். எவ்வளவு அதிக காலம் திருமண உறவு நிலைத்திருக்க முடியுமோ அவ்வளவு காலத்திற்கு அது நிலைத்திருக்கட்டும் என்றே அன்னார் விரும்பினார்கள். இந்த சிந்தனையின் காரணமாக நபி (ஸல்) அவர்கள் மிகவும் வலியுறுத்தி அதிகமாக ஸைதிற்கு நீர் தலாக் கொடுக்காதீர்கள். இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். முடிந்த அளவுக்கு திருமண உறவை தக்க வைத்துக் கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறி வந்தார்கள்.

ஸைது தலாக் கொடுத்த பிறகு ஜைனப் அவர்களை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொண்டால் இதன் காரணமாக மக்கள் ஆட்சேபனை செய்யக் கூடும் என்ற ஒரு எண்ணமும் நபி (ஸல்) அவர்களுக்கு இருந்தது. தம்முடைய வளர்ப்பு மகனால் தலாக் செய்யப்பட்ட பெண்ணை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள் என்று ஆட்சேபனை எழும். இது தேவையில்லாத ஒரு சோதனையை உருவாக்கும் என்பதையும் நபி (ஸல்) அவர்கள் அறிந்திருந்தார்கள்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَتُخۡفِيۡ فِيۡ نَفۡسِكَ مَا اللّٰهُ مُبۡدِيۡهِ وَتَخۡشَى النَّاسَ وَاللّٰهُ اَحَقُّ أَنۡ تَخۡشَاهُ (33:38)

அல்லாஹ் வெளிப்படுத்தவிருந்ததை நீர் உமது உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தீர். மேலும் நீர் மக்களுக்கு அஞ்சினீர். ஆனால் நீர் அஞ்சுவதற்கு மகவும் உரிமையுள்ளவன் அல்லாஹ்வே ஆவான்.

எவ்வாறிருப்பினும், நபி (ஸல்) அவர்கள் ஸைதிற்கு இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும் என அறிவுரை கூறி தலாக் கொடுப்பதை விட்டு தடுத்தார்கள். ஸைது இந்த அறிவுரைக்கு முன்னால் தலை குனிந்தவாறு மவுனமாக திரும்பிச் சென்று விட்டார்கள். ஆனால் விலகிய உள்ளத்தை ஒன்று சேர்ப்பது கடினமானதாகும். பிளவு ஏற்பட்டு விட்டது. அந்த பிளவு இனி ஒன்று சேர்வது கடினமாகும்.

சிறிது காலத்திற்குப் பிறகு ஸைது அவர்கள் தலாக் கொடுத்து விட்டார்கள். ஜைனப் அவர்களின் இத்தா காலம் முடிவடைந்த பிறகு திருமணம் தொடர்பாக நபி (ஸல்) அவர்களுக்கு மீண்டும் வஹீ இறங்கியது. அதாவது நபி (ஸல்) அவர்கள் ஜைனப் அவர்களை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என வஹீ இறங்கியது.

இறைவனுடைய இந்த கட்டளையில் இருந்த நுட்பமான ஞானம் ஒன்று, இந்த திருமணத்தினால் ஹஸ்ரத் ஜைனப் அவர்களுக்கும் மன ஆறுதல் ஏற்படும். தலாக் கொடுக்கப்பட்ட ஒரு பெண்ணை திருமணம் செய்வது முஸ்லிம்களில் ஒரு குறையாக கருதப்படாது. இன்னொரு நுட்பமான ஞானம் என்னவென்றால், ஸைது நபி (ஸல்) அவர்களின் வளர்ப்பு மகன் ஆவார். அன்னாருடைய மகன் என்று சொல்லப்பட்டு வந்தார்.

எனவே அவரால் தலாக் கொடுக்கப்பட்ட பெண்ணை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்வதால் முஸ்லிம்களிடம் செயல்பூர்வமான ஒரு விளைவு ஏற்படும். அதாவது வளர்ப்பு மகன் சொந்த மகனைப் போன்று ஆக மாட்டார். சொந்த மகனுக்குரிய கட்டளைகள் வளர்ப்பு மகனுக்குப் பொருந்தாது. அரபு மக்களிடமிருந்த அறிவீனமான சடங்குகள் முஸ்லிம்களினால் முழுமையாக அழிக்கப்பட்டு விடும். இது தொடர்பாக இஸ்லாமிய வரலாற்றில் மிகச் சரியான பதிவாக விளங்கும் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

فَلَمَّا قَضٰى زَيۡدٌ مِّنۡهَا وَطَرًا زَوَّجۡنٰكَهَا لِكَيۡ لَا
يَكُوۡنَ عَلَى الۡمُؤۡمِنِيۡنَ حَرَجٌ فِيۡٓ اَزۡوَاجِ اَدۡعِيَآئِهِمۡ
اِذَا قَضَوۡا مِنۡهُنَّ وَطَرًا وَكَانَ اَمۡرُ اللّٰهِ مَفۡعُوۡلًا (33::38)

அதாவது நம்பிக்கை கொண்டவர்களின் வளர்ப்பு மகன்கள் தங்கள் மனைவியருக்கு மண விலக்கு அளித்து விட்டால் அப்பெண்களை (மணந்து கொள்வதை) குறித்த (நம்பிக்கை

கொண்ட) அவர்களுக்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்பதற்காக ஸைது அவள் குறித்து தன் விருப்பத்தை நிறைவேற்றிய பின்னர் (அதாவது அவளுக்கு மணவிலக்கு அளித்த பின்னர்) நாம் அவளை உமக்கு திருமணம் செய்து வைத்தோம். எவ்வாறிருந்தபோதிலும் அல்லாஹ்வின் தீர்ப்பு நிறைவேறியே தீரும்.

இறைவனின் இந்த வஹீ இறங்கிய பின்னர் இதில் நபி (ஸல்) அவர்களுடைய சொந்த விருப்பத்திற்கு எவ்வித பங்கும் இல்லை. அன்னார் ஜைனப் அவர்களைத் திருமணம் செய்து கொள்ள தீர்மானித்தார்கள். ஸைது மூலமே ஜைனப் அவர்களை தாம் திருமணம் செய்து கொள்வதற்கான தூது அனுப்பினார்கள். ஜைனப் அவர்களும் அதற்கான விருப்பத்தை தெரிவித்த பிறகு அவரது சகோதரரான அபூ அஹ்மது பின் ஜஹஷ் அவர்கள் ஜைனப் அவர்கள் சார்பாக வலியாக இருந்து 400 திர்ஹம்களுக்கு ஜைனப் அவர்களை நபி (ஸல்) அவர்களுக்கு திருமணம் முடித்துக் கொடுத்தார்கள். இவ்வாறு அரபு நாட்டில் மிகவும் உறுதியாக ஊடுவிருயிருந்த ஒரு தீய சடங்கு நபி (ஸல்) அவர்களின் செயல்பூர்வமான முன்மாதிரியின் விளைவாக வேரோடு பிடுங்கி எறியப்பட்டது.

இவ்விடத்தில் இதைக் குறிப்பிடுவதும் அவசியமாகும். அதாவது சாதாரண வரலாற்றாசிரியர்கள் மற்றும் ஹதீஸ் வல்லுனர்களின் கருத்து என்னவென்றால், ஜைனப் அவர்களின் திருமணம் தொடர்பாக இறைவனுடைய வஹீ இறங்கியது. மேலும் இறைவனுடைய சிறப்பான கட்டளையின் அடிப்படையில் இந்த திருமணம் நடந்தது. எனவே வெளிப்படையாக நிக்காஹ் நிகழ்ச்சி நடைபெறவில்லை என்பதாகும்.

ஆனால் இந்த எண்ணம் தவறாகும். இறைவனது கட்டளையினால் தான் இந்த திருமணம் நடந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. வானத்தில் இந்த நிக்காஹ் ஓதப்பட்டது என்றும் சொல்லலாம். ஆனால் ஷரீஅத்தின்படி வெளிப்படையான திருமண நிகழ்ச்சி நடத்துவதும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு கட்டளையாகும். இதிலிருந்து விதிவிலக்கு பெற முடியாது.

இப்னு ஹிஷாமின் அறிவிப்பு இதற்கு முன்னால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அதில் வெளிப்படையாக நிக்காஹ் நிகழ்ச்சி நடைபெற்றது என கூறப்பட்டுள்ளது. இது இந்த விவகாரத்தில் மிகத் தெளிவுபடக்கூடிய ஒன்றாகும். இதில் எந்த விதமான சந்கேத்திற்கும் இடமில்லை.

சில ஹதீஸ்களில் இவ்வாறும் வருகிறது. நபி (ஸல்) அவர்களுடைய ஏனைய மனைவிமார்களாகிய உம்முகாத்துல் முஃமினீன் அவர்கயோடு ஒப்பிடுகையில் ஹஸ்ரத் ஜைனப் அவர்கள் இவ்வாறு கூறி பெருமைபட்டுக் கொள்வார்கள். அதாவது உங்களுடைய திருமணங்களை உங்களுடைய வலிகள் பூமியில் நடத்தி வைத்திருக்கின்றார்கள். ஆனால் என்னுடைய நிக்காஹ் வானத்தில் நடைபெற்றது.

ஜைனப் அவர்களின் நிக்காஹ் நிகழ்ச்சியானது வெளிப்படையாக நடைபெறவில்லை என்று ஆதாரம் காட்டுவது சரியானதல்ல. ஏனென்றால் வெளிப்படையான நிக்காஹ் நிகழ்வு நடைபெற்றிருந்தாலும் இறைவனுடைய குறிப்பான கட்டளையினால் வானத்தில் எனது நிக்காஹ் நடந்தது என்பதில் அவர்கள் பெருமைபட்டுக் கொள்வதில் அவர்களது இந்தப் பெருமை நிலைபெற்றிருக்கலாம்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. நபி (ஸல்) அவர்கள் ஜைனப் அவர்களிடம் அனுமதியின்றி சென்றார்கள். இதை வைத்து வெளிப்படையாக நிக்காஹ் நடைபெறவில்லை என்று கருதுவது சரியாகாது. சற்று சிந்தித்துப் பார்த்தால் இந்த சம்பவத்திற்கு அவர்களின் நிக்காஹ் வெளிப்படையாக நடைபெற்றதா? இல்லையா? என்ற கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்று நிரூபணமாகும். நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜைனப் அவர்களின் வீட்டிற்கு அனுமதியின்றிச் சென்றார்கள் என்பது தவறானதாகும். ஏனென்றால் புகாரியின் இந்த தெளிவான அறிவிப்பு காணப்படுகிறது.

அதாவது திருமணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஜைனப் அவர்கள் நபி (ஸல்) அவர்களின் வீட்டிற்கு மனைவியாக வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் ஜைனப் அவர்களின் வீட்டிற்குச் செல்லவில்லை என்று காணப்படுகிறது. ஜைனப் அவர்கள் திருமணத்திற்குப் பிறகு நபி (ஸல்) அவர்களின் வீட்டிற்கு வந்தார்கள். அதன் பிறகு நபி (ஸல்) அவர்கள் அனுமதியின்றி ஜைனப் அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள் என்றால் இதுவொன்றும் வழக்கத்திற்கு மாற்றமான செயல் அல்ல என்பது வெளியடையாகும்.

ஏனென்றால் ஜைனப் அவர்கள் நபி (ஸல்) அவர்களின் மனைவியாக அன்னாரது வீட்டிற்கு வந்து விட்ட பிறகு அன்னாரும் அவர்களது வீட்டிற்கு சென்றே ஆக வேண்டும். மேலும் அதற்காக அன்னார் அனுமதி கோர வேண்டிய அவசியமுமில்லை. ஆகவே அனுமதி வாங்காமல் வீட்டிற்குச் சென்றார்கள் என்ற ஹதீஸ் அறிவிப்பிற்கும் நபி (ஸல்) அவர்களுடைய இந்த நிக்காஹ் நிகழ்ச்சி வெளிப்படையாக நடந்ததா? இல்லையா? என்ற கேள்விக்கு சம்பந்தமேயில்லை.

உண்மை இதுவாகும். அதாவது இப்னு ஹிஷாமின் அறிவிப்பில் மிகத் தெளிவாக காணப்படுகிறது. இறை கட்டளை வந்த பிறகும் கூட இந்த நிக்காஹ் முறைப்படி நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது. இதுவே உண்மையாகும். இவ்வாறே நடக்க வேண்டும் என்பதைத்தான் அறிவும் எதிர்பார்க்கிறது. ஏனெனில் ஒன்று, பொதுவான விதிமுறையின்படி இங்கு நிக்காஹ் நடத்தப்படாமல் இருப்பதற்கு விதிவிலக்கிற்கான எந்த காரணமும் இல்லை.

இரண்டாவதாக, இந்த நிக்காஹ்வின் மூலமாக ஒரு சடங்கை முறியடிப்பதும் அதன் தீய விளைவுகளை போக்குவதும் அடிப்படை நோக்கமாக இருந்தது. வளர்ப்பு மகனால் தலாக் கொடுக்கப்பட்ட பெண்ணை நிக்காஹ் செய்யக்கூடாது என்று ஒரு தவறான சடங்கு இருந்து வந்தது. அதுவும் மிக உறுதியாக இருந்து வந்தது. இந்த சம்பிரதாயத்தை அழிப்பது இந்த நிக்காஹ்வின் நோக்கமாக இருந்தது. இந்த நிக்காஹ் மிகப்பெரிய அளவில் பகிரங்கமான அறிவிப்புச் செய்து நடத்தப்பட வேண்டும் என்பது எல்லாவற்றையும் விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த சம்பிரதாயம் இன்றுடன் அழிக்கப்படுகின்றது என உலக மக்களுக்கு தெரிவிக்கப்படுவதற்காக மிகப்பெரிய சாட்சிகளின் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும் என்பது அவசியமாகும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 543–546)

ஹஸ்ரத் ஸைது அவர்களின் வாழ்க்கை சம்பவங்களில் ஹஸ்ரத் ஜைனப் பற்றியும், நபி (ஸல்) அவர்களுடைய திருமணம் பற்றியும் நான் சற்று விளக்கமாகவே எடுத்துரைத்துள்ளேன். நபி (ஸல்) அவர்கள் ஜைனப் அவர்களைத் திருமணம் செய்தது தொடர்பாக இன்றும் கூட ஆட்சபேனை செய்பவர்கள் கேள்வி மற்றும் ஆட்சேபனையை முன் வைக்கின்றார்கள்.

எனவே இது சம்பந்தமாக நாமும் சற்று விளக்கமாக தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்கு இன்னும் சில விளக்கங்கள் இருக்கின்றன. ஹஸ்ரத் ஸைது அவர்களைப் பற்றி இன்னும் எடுத்துரைப்பதற்கான பல கருத்துக்களும் இருக்கின்றன. இந்த விஷயங்களும் எந்த அளவுக்கு எடுத்துரைப்பதற்கு அவசியம் ஏற்படுகிறதோ அதைப்பற்றி நான் வருங்காலத்தில் எடுத்துக் கூறுவேன். இப்போது இது ஹஸ்ரத் ஸைது அவர்கள் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டு வருகின்றது.

**நான் உங்களுக்குக் கவனமூட்டுகின்றேன். அதாவது நீங்கள் எனது ஜுமுஆ பேருரையை மிகவும் கவனமாக கேளுங்கள். மேலும் அதனைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் என்னால் கூறப்பட்ட வழிகாட்டல்களைப் பின்பற்றி நடங்கள். இது உங்களது நம்பிக்கை மற்றும் கிலாஃபத் அமைப்புடன் உள்ள தொடர்பை வலுப்படுத்துவதற்கு காரணியாக அமையும்**

**நீங்கள் எப்போது கிலாஃபத் என்ற இந்த மகத்துவமிக்க அருளை மதிக்க வேண்டும். மேலும் நீங்களும், உங்களது வரக்கூடிய சந்ததிகளும் எப்போதும் கிலாஃபத் என்ற அருளுக்குரிய வழிகாட்டல், தலைமை மற்றும் கோட்டையில் இருப்பீர்கள் என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்**

**நான் உங்களுக்குக் கவனமூட்டுகின்றேன். அதாவது எப்போதும் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்தவாறு உங்களது ஆன்மீக நிலைமைகளை சிறந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் இறையச்சத்தில் எப்போதும் முன்னேறிக் கொண்டிருங்கள். மேலும் உங்களது ஒவ்வொரு பணி மற்றும் செயல்களை சிறந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். மனித இனத்துடன் பரிவு மற்றும் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். மேலும் எப்போதும் முன்னுதாரணமான அஹ்மதி முஸ்லிமாக இருங்கள்**

**2018 – ஆம் ஆண்டு மால்டாவில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கிய சிறப்பு தூதுச் செய்தி**

2 டிசம்பர் 2018 ஞாயிற்றுகிழமையன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மால்டா (ஐரோப்பா) தனது இரண்டாவது ஆண்டு மாநாட்டை கொண்டாடியது. இந்த ஆண்டு மாநாடு Centru Famil Ja Mqaddsa என்ற ஒரு சர்ச்சிலுள்ள கட்டிடத்தின் ஓர் அறையில் நடந்தது. முபல்லிக்கும், ஜெர்மனி ஜமாஅத்தின் துணை அமீருமான மதிப்பிற்குரிய மவ்லானா ஹைதர் அலி ஜஃபர் சாஹிப் அவர்களின் தலைமையில் மாநாட்டின் முதல் அமர்வு நடைபெற்றது. திருக்குர்ஆன் மற்றும் நஸ்ம் ஆகியவற்றிற்குப் பிறகு அன்பிற்குரிய ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் வழங்கியிருந்த சிறப்பு தூதுச் செய்தி படித்துக் காட்டப்பட்டது. அதற்குப் பிறகு உருது மற்றும் ஆங்கில மொழிகளில் சொற்பொழிவு நடைபெற்றது. இந்த அமர்வின் இறுதி சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா ஹைதர் அலி ஜஃபர் சாஹிப் அவர்கள் நிகழ்த்தினார்கள். இரண்டாவது அமர்வில் Interfaith Session நடத்தப்பட்டது. இதன் தலைப்பு 'எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு' என்பதாகும். திருக்குர்ஆன் ஓதப்பட்ட பிறகு முபல்லிக்கும், ஜெர்மனி ஜமாஅத்தின் துணை அமீருமான மதிப்பிற்குரிய மவ்லானா ஹைதர் அலி ஜஃபர் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில் கலந்து கொண்டவர்களுக்கு முன்னிலையில் ஆண்டு மாநாட்டின் நோக்கத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பிறகு மால்டா நாட்டின் அதிபரின் தூதுச் செய்தி படித்துக் காட்டப்பட்டது. இதற்குப் பிறகு மூன்று விருந்தினர்கள் தமது தாக்கத்தைக் குறித்து எடுத்துக் கூறினர். மாநாட்டின் இறுதியில் முபல்லிக்கும், மால்டா ஜமாஅத்தின் தலைவருமாகிய மதிப்பிற்குரிய லயீக் அஹ்மது ஆதிஃப் சாஹிப் அவர்கள் Inter Religious Peace என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். துஆவிற்குப் பிறகு மாநாடு நிறைவுற்றது. மாநாட்டில் மொத்தம் 75 பேர் கலந்து கொண்டனர். இதில் 37 அஹ்மதிகளும், ஜமாஅத்தைச் சாராத 2 முஸ்லிம்களும், 36 கிறிஸ்தவ நண்பர்களும் கலந்து கொண்டனர். 12 மே 2019 அன்று அல் ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிகையில் இத்தூதுச் செய்தி வந்துள்ளது. எனவே நன்றி தெரிவித்தவாறு ஹுஸூர் அவர்களின் சிறப்பு தூதுச் செய்தி பத்ர் பத்திரிகையின் வாசர்களுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. (பத்ர் துறை)

بسم الله الرحمن الرحيم

نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

خدا کے فضل اور رحم کے ساتھ

ھو الناصر

அன்பிற்குரிய அஹ்மதிய்யா ஜமாஅத் மால்டா உறுப்பினர்களுக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹு

தாங்கள் டிசம்பர் 2 ஆம் தேதி உங்களது ஆண்டு மாநாட்டை நடத்துகின்றீர்கள் என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். எனது துஆ என்னவென்றால், அல்லாஹ் உங்களது மாநாட்டிற்கு மகத்துவமிக்க வெற்றியை வழங்குவானாக. மேலும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு இந்த இஜ்திமாவிலிருந்து முழுமையான முறையில் ஆன்மீக பயனைப் பெறவும், மேலும் அளப்பற்ற அருட்களைப் பெறுவதற்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

நாம் உண்மையான அஹ்மதி முஸ்லிமாக ஆகுவதற்காக எப்போதும் முயற்சி செய்து வர வேண்டும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த உடன்படிக்கையின்படி அதாவது பைஅத் நிபந்தனைகளின்படி முழுமையாக செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் அன்னாரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நமது மஹ்தி' என்ற சுட்டுப் பெயரால் மிகவும் அன்புடனும் மரியாதையுடனும் அழைத்துள்ளார்கள் என்ற இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தின் பக்கம் மீண்டும் மீண்டும் எனது குத்பாக்களில் நான் அழுத்தம் கொடுத்தேன்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எவர் இந்த இயக்கத்தில் நுழைந்து என்னுடன் கொள்கைப் பிடிப்புள்ள மற்றும் கட்டுப்படக்கூடிய தொடர்பை வைத்துள்ளாரோ அதன் நோக்கம் இதுவேயாகும். அதாவது, அவர் இறையச்சத்தின் உயர் அந்தஸ்தை அடைய வேண்டும். மேலும் எவ்வித குழப்பம் மற்றும் தீங்கு மற்றும் தீய நடத்தை ஆகியவை அவருக்கு அருகில் கூட வரக் கூடாது. மேலும் அவர் ஐவேளை தொழுகைகளை ஜமாஅத்தாக தொழுவதைப் பேணி நடக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

அவர் பொய் பேசக் கூடாது. மேலும் எவருக்கும் நாவினால் தொல்லை கொடுக்கக் கூடாது. மேலும் அவர் எவ்வித தீய செயலிலும் மூழ்கி விடக்கூடாது. மேலும் எவ்விதத் தீங்கு, அநீதி மற்றும் குழப்பம் போன்ற எண்ணங்களை தமது உள்ளத்தில் கொண்டு வரக்கூடாது.

ஆக, ஒவ்வொரு வகையான தீங்கு மற்றும் குற்றங்கள், அனைத்து விதமான மன இச்சைகள், தீய செயல்கள் ஆகியவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும். மேலும் தூய்மையான உள்ளம் கொண்ட, தீங்கிழைக்காத, ஏழையின் இயல்பை கொண்ட அடியானாக ஆகி விட வேண்டும். மேலும் எந்தவொரு விஷத் தன்மையும் அவரது இருப்பில் இருக்கக் கூடாது.

(மஜ்மூஆ இஷ்திஹார் தொகுதி 3 பக்கம் 46,47)

எனவே கொள்கைகளில் சீர்திருத்தம் ஏற்படுவது மட்டும் போதுமானது கிடையாது. மாறாக, ஒரு சிறந்த மற்றும் கலப்பற்ற அஹ்மதியாக ஆகுவதற்கு தமது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்தியவாறு பைஅத் நிபந்தனைகளின்படி செயல்படுவது அவசியமாகும்.

பைஅத் என்பதன் பொருள், தம்மைத்தாமே இறைவனிடம் விற்று விடுவதாகும். மேலும் எவர் பைஅத்திற்கான உடன்படிக்கை செய்வாரோ அவர், பணிவை மேற்கொள்ள வேண்டும். மேலும் தம்மிடம் ஆணவம், கர்வம், தான் என்ற அகந்தை ஆகியவற்றை முற்றிலும் விலக்கி வைக்க வேண்டும். பைஅத் என்பதன் பொருள், இறை கட்டளைகளை முழுமையாக பின்பற்றி நடப்பதாகும். எவர் உண்மையிலேயே இவ்வாறு செய்வாரோ பிறகு அத்தகைய நபரை இறைவன் வீணாக்குவதில்லை. மேலும் எல்லா ரீதியிலும் அவரைப் பாதுகாக்கின்றான்.

நான் உங்களுக்குக் கவனமூட்டுகின்றேன். அதாவது எப்போதும் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்தவாறு உங்களது ஆன்மீக நிலைமைகளை சிறந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் இறையச்சத்தில் எப்போதும் முன்னேறிக் கொண்டிருங்கள். மேலும் உங்களது ஒவ்வொரு பணி மற்றும் செயல்களை சிறந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். மனித இனத்துடன் பரிவு மற்றும் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். மேலும் எப்போதும் முன்னுராணமான அஹ்மதி முஸ்லிமாக இருங்கள்.

நான் உங்களுக்குக் கவனமூட்டுகின்றேன். அதாவது நீங்கள் எனது ஜுமுஆ பேருரையை மிகவும் கவனமாக கேளுங்கள். மேலும் அதனைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் என்னால் கூறப்பட்ட வழிகாட்டல்களைப் பின்பற்றி நடங்கள். இது உங்களது நம்பிக்கை மற்றும் கிலாஃபத் அமைப்புடன் உள்ள தொடர்பை வலுப்படுத்துவதற்குக் காரணியாக அமையும்.

ஆக, நீங்கள் எப்போதும் கிலாஃபத் என்ற இந்த மகத்துவமிக்க அருளை மதிக்க வேண்டும். மேலும் நீங்களும், உங்கள் வரக்கூடிய சந்ததிகளும் எப்போதும் கிலாஃபத் என்ற அருளுக்குரிய வழிகாட்டல், தலைமை மற்றும் கோட்டையில் இருப்பீர்கள் என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் உங்களது மாநாட்டிற்கு மகத்துவமிக்க வெற்றியை வழங்குவானாக. மேலும் உங்களுக்கு அனைத்து பைஅத் உடன்படிக்கைகளின்படியும் செயல்படுவதற்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் இறையச்சம் மற்றும் ஆன்மீகத்தில் முன்னேறுபவர்களாக இருப்பதற்கு உங்கள் அனைவருக்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் உங்களது வாழ்க்கையில் ஒரு உண்மையான புரட்சியை கொண்டு கொண்டு வருவதற்கு அல்லாஹ் உங்களுக்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் நீங்கள் தூய்மை, நன்மை, இஸ்லாத்திற்குத் தொண்டு செய்தல் மற்றும் மனிதத் தொண்டு ஆகியவற்றில் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்வீர்களாக. அல்லாஹ் உங்கள் அனைவர் மீதும் அளவற்ற அருள் செய்வானாக.

வஸ்ஸலாம் எளியவன்

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்


***நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்***

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.


*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

அவர்கள் என்னை ஏற்றுக் கொள்கிறார்கள்; ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள்! என்னை விட்டு விலகிச் செல்பவர் என்னை அனுப்பி வைத்திருப்பவனை விட்டுத் தான் விலகிச் செல்கிறார். என்னுடன் சேர்ந்து கொள்பவர், நான் எவனிடமிருந்து வந்தேனோ அவனோடுதான் சேர்ந்து கொள்கிறார்.

நான் என் கையில் ஒரு விளக்கை ஏந்தி இருக்கிறேன். என்னிடம் வருகின்றவர் அந்த ஒளியிலிருந்து கண்டிப்பாக பங்கைப் பெறுவார். ஆனால், யூகத்தாலும் தவறான எண்ணத்தாலும் என்னை விட்டு விலகி ஓடுபவர் இருளினுள்ளே போடப்படுகின்றார்.

நான் இக்காலத்தின் உறுதிவாய்ந்த கோட்டையாக இருக்கிறேன். எனக்குள்ளே நுழைகிறவர் திருடர்களிடமிருந்தும் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் கொடிய விலங்குகளிடம் இருந்தும் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்கிறார். ஆனால் எனது சுவர்களிலிருந்து தொலைவில் இருக்க விரும்புகிறவருக்கு எல்லாத் திசைகளிலும் மரணம் காத்திருக்கிறது. உயிரற்ற அவரது சடலம் கூட பாதுகாப்பாக இருக்காது.....

இறைவனுடைய என்றும் மாற்றமில்லாத உறுதிவாய்ந்த சட்டத்திற்கு அஞ்சுங்கள். அவன் தனது தூய மறையில் இவ்வாறு கூறுகின்றான்: அதாவது, உங்களுக்குப் பிரியமான செல்வத்தையும், பொருள்களையும் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாத வரையில், இரட்சிப்பு வரை கொண்டு செல்கின்ற உண்மையான நன்மையினை நீங்கள் ஒருபோதும் பெற முடியாது.

(ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3, பக்கம் 30, 38 வெளியீடு : நஸாரத் நஷ்ரோ இஷாஅத் காதியான் 2008 ஆம் ஆண்டு பதிப்பு)


**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்களிடத்துக் கருணை காட்டவே அல்லாஹ் விரும்புகின்றான். தீய இச்சைகளைப் பின்பற்றுபவர்களோ, நீங்கள் (தீமையின் பக்கம்) முற்றிலும் சாய்ந்துவிட வேண்டும் என்றே விரும்புகின்றீர்கள். உங்களுக்குச் சுமையை எளிதாக்கவே அல்லாஹ் விரும்புகின்றான். ஏனென்றால், மனிதன் பலவீனனாகப் படைக்கப்பட்டுள்ளான். (4:28,29)

A.Shamsul Alam

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்களுக்குத் தடுக்கப்பட்ட பெரும் பாவத்திலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால், நாம் உங்களின் (சிறு) குறைபாடுகளை, உங்களை விட்டு அகற்றி விடுவோம். மேலும் பெருங் கண்ணியத்திற்குரிய இடத்தில் உங்களை நுழையச் செய்வோம். உங்களுள் சிலருக்கு (வேறு) சிலரை விடவும் அல்லாஹ் எதில் சிறப்பினை வழங்கியுள்ளானோ அதில் பேராசை கொள்ளாதீர்கள். (4:32,33)

Faizal Hameed Ilahi

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிச்சயமாக அல்லாஹ் (யாருக்கும்) ஓர் அணுவளவு கூட அநீதி இழைக்க மாட்டான். அது நற்செயலாக இருக்குமாயின் அவன் அதனை அதிகமாக்கித் தன்னிடமிருந்து மாபெரும் நற்பலனை வழங்குவான். நாம் ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒரு சாட்சியைக் கொண்டு வரும்போது, உம்மை அவர்களுக்குச் சாட்சியாக கொண்டு வரும் போதும் அவர்களின் நிலை எவ்வாறிருக்கும்? (4:41,42)

A.Nasir Ahmad

அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 18 July 2019 Issue No. 29

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)


**உங்களுக்குப் பிரியமான செல்வத்தையும், பொருள்களையும் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாத வரையில், இரட்சிப்பு வரை கொண்டு செல்கின்ற உண்மையான நன்மையினை நீங்கள் ஒருபோதும் பெற முடியாது**

“இந்திய நாடே! உன்னிடம் பொருள் வசதி படைத்த – குறைந்தபட்சம் இந்த ஒரு பிரிவுக்கு ஆகும் செலவை மட்டுமாவது தானே ஏற்றுக் கொள்வதற்கு முன்வரும் அளவுக்கு தைரியமுள்ள செல்வந்தர் ஒருவர் கூட இல்லையா? வசதி படைத்த ஐந்து நல்ல நம்பிக்கை கொண்டவர்கள் இந்த காலத்தைப் புரிந்து கொண்டால், இந்த ஐந்து பிரிவுகளையும் தத்தமது சொந்த பொறுப்பில் ஏற்று நடத்தலாம். இறைவனே! உறங்கிக் கொண்டிருக்கும் இந்த உள்ளங்களை உனது கைகளாலேயே தட்டி எழுப்புவாயாக! இஸ்லாம் அவ்வளவு ஏழ்மையானதல்ல. உள்ளத்திலும் உறுதிப்பாட்டிலும் அது ஏழ்மையானதாய் இருக்கின்றதே தவிர திறமையிலும் வளத்திலும் அது ஏழையல்ல. செல்வத்தின் முழுப் பகுதியையும் தந்து உதவ முடியாதவர்களும் கூட இத்திட்டத்திற்கு உதவ முடியும். ஒவ்வொரு மாதமும் தத்தமது பண வசதிக்கேற்ப உறுதியான வாக்குறுதியைத் தந்து கொஞ்சம் தொகையை இச்செயல் திட்டத்திற்காக பண உதவியாக தாராளமாகச் செலுத்த முடியும்.

சோம்பி இருப்பதும், இரண்டுங்கெட்டானாய் இருப்பதும், தவறான எண்ணம் கொள்வதும் மார்க்கத்திற்கு ஒருபோதும் உதவாது. தவறான எண்ணம் கொள்வது குடும்பங்களை அழித்து பாழாக்கி விடுகின்றது. பாருங்கள்! எவர்கள் நபிமார்களின் காலத்தைப் பெற்றார்களோ அவர்கள் மார்க்கத்தைப் பரப்புவதற்காக எத்தகைய தியாகங்களைச் செய்தனர். இவ்விஷயத்தில் செல்வந்தர்களும் ஏழைகளும் ஒன்றாகவே பங்கெடுத்தார்கள். எவ்வாறு ஒரு செல்வந்தர் மார்க்கத்தின் வழியில் தனது பிரியமான செல்வத்தை செலவு செய்தாரோ அவ்வாறே ஒரு பிச்சைக்காரனும் அதற்குச் சமமாக தனக்கு விருப்பமான பொருள்களால் நிறைந்திருந்த பிச்சை பாத்திரத்தை அவ்வழியில் தந்து விட்டார். இறைவன் புறமிருந்து வெற்றி வரும் வரை இவற்றை எல்லாம் மார்க்கத்திற்காகவே அவர்கள் தொடர்ந்து செய்து வந்தனர். ஓர் உண்மையான முஸ்லிமாக ஆவது – ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவராக ஆவது எளிதல்ல.

மக்களே! நம்பிக்கை கொண்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்த உண்மையான ஆன்மா உங்களிடம் இருந்தால் என்னுடைய இந்த அழைப்பை மேலோட்டமாகப் பார்க்காதீர்கள். நன்மையைப் பெறுவது பற்றி சிந்தியுங்கள். நீங்கள் இந்த தூதுச் செய்தியைக் கேட்டு என்ன பதில் கூறுகிறீர்கள் என்பதை இறைவன் வானத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறான்.”

“முஸ்லிம்களுக்குள் செல்வந்தர்களாய் இருப்பவர்களே! நான் உங்களுக்கு அறிவிக்கும் தூதுச் செய்தியை உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள். மக்களை சீர்திருத்துவதற்காக இறைவன் ஒரு செயல் திட்டத்தை அமைத்திருக்கிறான் என்பதுதான் அது. இந்த செயல் திட்டத்திற்கு முழு மனதுடனும் முழு கவனத்துடனும் முழுமையான கலப்பற்ற தூய உள்ளத்துடனும் உதவி செய்ய வேண்டும். இச்செயல் திட்டத்தின் எல்லா அம்சங்களையும் கண்ணியத்துடன் பார்த்து மிகவும் விரைவாகத் தொண்டு செய்வதற்கான உரிமையைச் செலுத்த வேண்டும். எந்த நபர் தனது தகுதிக்கேற்ப ஒரு குறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் கொடுக்க விரும்புகின்றாரோ அவர் இறைவனுக்கு செலுத்த வேண்டிய ஒரு கடமையாகவும் கட்டாயமாக திரும்பி செலுத்தப்பட வேண்டிய கடனைப் போன்றும் அதனை கருத வேண்டும். தாமாகவே ஒவ்வொரு மாதமும் மிகுந்த கவனத்துடன் அதை செலுத்தி வர வேண்டும்.

இந்த கடமையை முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுவதுடன் அதிலிருந்தும் தவறுவதை அவர்கள் அனுமதிக்கவே கூடாது. ஒரே சமயத்தில் மொத்தமாக பெருந் தொகையைத் தர விரும்புபவர்களும் அவ்வாறே அதைச் செலுத்தலாம். ஆனால் இந்த வேலை எவ்வித தடையும் இன்றித் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதுதான் உண்மையில் விரும்பப்படுகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எனவே, உண்மையில் மார்க்கத்திற்கு நல்லதை விரும்புபவர்கள் வாக்களித்து அதன்படி தங்களின் வசதிக்குட்பட்டு மாதாமாதம் நன்கொடைகள் அனுப்பித் தர வேண்டும். மேலும் அவர்கள் ஏதேனும் ஓர் இக்கட்டான சந்தர்ப்பத்தினால் தடை ஏற்பட்டாலேயொழிய ஒவ்வொரு மாதமும் ஒழுங்காக நன்கொடைகளை எளிதில் செலுத்த வேண்டும். ஆனால், எவருக்கு அல்லாஹ் ஜல்ல ஷானஹு நல்வாய்ப்பையும் திறந்த உள்ளத்தையும் வழங்குவானோ அவர் இந்த மாதாந்திர சந்தாவை தவிர தனது விரிவான தைரியம் மற்றும் வசதிக்கும் சக்திக்கும் ஏற்ப ஒரே சமயத்தில் மொத்தமாகப் பெருந்தொகையை சிறப்பான நன்கொடையாக வழங்கியும் உதவி செய்யலாம்.

என்னுடைய நண்பர்களே! என் அன்புக்குரிய தோழர்களே! எனது மரத்தின் பசுங் கிளைகளே! நீங்கள் இறைவனின் அளப்பெரும் கருணையால் பைஅத்தின் மூலம் என்னுடன் சேர்ந்து உங்கள் உயிரையும், ஓய்வு நேரத்தையும், உடைமைகளையும் இந்த நோக்கத்திற்காக அர்ப்பணிக்கின்றீர்கள். நான் உங்களிடம் எதைக் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்வதை உங்களுடைய நற்பாக்கியமாகக் கருதுவீர்கள் என்பதும், உங்களது சக்திக்கேற்ப இவ்வழியில் தியாகம் செய்யத் தயங்க மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். இருப்பினும் இந்த தொண்டிற்காக என் விருப்பத்தின் பேரில் எனது நாவுகளால் எதையும் குறிப்பிட்டு நிர்ணயம் செய்து அதை உங்கள் மீது கடமையாக்க விரும்பவில்லை. ஏனெனில் நீங்கள் செய்யும் தியாகங்கள் எனது வற்புறுத்தலின் பேரில் அல்லாமல் நீங்கள் மகிழ்ச்சியுடன் செய்தவையாக இருக்க வேண்டும். எனது வேண்டுதலுக்காகச் செய்யப்படக் கூடாது.

என்னுடைய நண்பர் யார்? என்னிடத்தில் அன்பு கொண்டவர் யார்? என்னை அடையாளம் கண்டு கொண்டவர்தான். என்னை அடையாளம் கண்டு கொண்டவர் யார்? நான் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கிறேன் என்று உறுதியாக நம்புகிறவர்தான். இறைவனால் அனுப்பப்பட்டவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது போன்று என்னை அவர் ஏற்றுக் கொள்கின்றார். இந்த உலகு என்னை ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில் நான் இவ்வுலகத்தை சேர்ந்தவன் அல்லன். ஆனால் மறுவுலகோடு யாருடைய ஆன்மாக்கள் தொடர்பு கொண்டுள்ளனவோ

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad